DINAMALAR 06 AUG 2009

# 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடுகிறது ஈஷா பசுமைத்திருப்பூர் இயக்கம்

திருப்பூர், ஆக. 6-

ஈஷா பவுண்டேசன் அங்கமான பசுமைத்திருப்பூர் இயக்கம் சார்பில், திருப்பூர் மாநகராட்சி பகுதி முழுவதும் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. மரக்கன்றுகள் நடுவதோடு விட்டு விடாமல், தொடர்ந்து மூன்று ஆண்டுகள், அவற்றை பராமரிக்கவும் திட்டமிட்டுள்ளது, பசுமைத்திருப்பூர் இயக்கம்.

கோவை மாவட்டத்தில் தொண்டாமுத்தூர் அருகே வெள்ளிங்கிரி மலையடிவாரத்தில் ஈஷா யோக மையம் அமைந்துள்ளது. இதன் நிறுவனர் ஜக்கி வாசுதேவ், ஈஷா பவுண்டேசன் அமைத்து மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். ஈஷா பவுண்டேசன் அங்கமான பசுமைத்திருப்பூர் இயக்கம் சார்பில், திருப்பூரில் மரக்கன்று நடும் விழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆக., 23ல் பிரமாண்ட விழா

ஆக., 23ம் தேதி விழா நடக்கிறது; சிறப்பு விருந்தினராக பங்கேற்க துணை முதல்வர் ஸ்டாலின் அழைக்கப்பட்டுள்ளார். அன்றைய தினம், மாநகராட்சி பகுதி முழுவதும் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. மேலும், 'பசுமை மாரத்தான்' என்ற போட்டியும் நடத்த திட்டமிட்டுள்ளனர். மாரத்தான் நிகழ்ச்சியில், திரைப்பட நடிகர், நடிகைகளை பங்கேற்கச் செய்ய, அவ்வமைப்பு முயற்சித்து வருகிறது.

மேலும், ஜக்கி வாசுதேவ் பேருரை ஆற்ற உள்ளார். இவ்விழா ஏற்பாடுகள் விரிவாக நடந்து வருகிறது. மரக்கன்றுகள் நடுவதோடு நின்று விடாமல், தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அவற்றை பராமரிக்கவும், பசுமைத் திருப்பூர் இயக்கம் சூளுரைத்துள்ளது.